emphasise on short-term research projects which could easily increase production efficiency to the extent of at least 20% within a very short period.

Mr. Kumar got himself convinced about the management process going on in the division and the type of problems being faced.

Questions :

What steps should be taken by Mr. Kumar to overcome these problems?

பாரத் இஞ்சினியரிங் ஒர்க்ஸ் நிறுவனமானது தொழிற்சாலை இயந்திரங்களை உற்பத்தி செய்யும் நிறுவனமாகும். இந்நிறுவனம் குறைவான போட்டியின் காரணமாக தனது பொருட்களுக்கு கணிசமான சந்தை பங்கினை கொண்டிருந்தது. வெளிநாட்டு தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் இரண்டு புதிய போட்டியாளர்கள் இந்த தொழிலில் நுழைந்ததால் பாரத் நிறுவனத்தின் பழையநிலை மாறியது இந்த பிரச்சனைகளைக் களைய திரு. குமார் என்பவர் பொது மேலாளராக பணி நியமனம் செய்யப்பட்டார். இவர் இந்தியா திரும்புவதற்கு முன்பு வெளிநாடுகளில் இது போன்ற பணியில் ஈடுபட்டுள்ளார்.

தனது பணிகளில் எதற்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பதற்காக திரு. குமார் நிறுவனத்தின் தலைமை நிர்வாகியிடம் கலைந்துரையாடலை மேற்கொண்டார். முதல் நிலை தகவலுக்காக அனைத்து துறைத் தலைவர்களையும் கலந்தாலோசிக்குமாறு திரு. குமாருக்கு தலைமை நிர்வாகி அறிவுரை வழங்கினார். குமார் பணிக்கு சேர்ந்த பிறகு பல



தகவல்களை அனைத்து துறைத் தலைவர்களிடமிருந்து பெற்றுள்ளார்.

விற்பனையாளர்கள் மையப்படுத்தப்பட்ட விற்பனை அமைப்பை பெற்றிருக்கவில்லை என்பது ஒரு கருத்தாகும். உற்பத்தி மேலாளர், பழைய இயந்திரங்களை பயன்படுத்த வேண்டியிருப்பதால் உற்பத்தி செலவு அதிகரிப்பதுடன் பொருளின் தரம் குறைகிறது என்று புகார் செய்துள்ளார். ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு இயக்குநர் எந்த ஒரு குறிப்பிட்ட பிரச்சனையையும் குறிப்பிடவில்லை. இருப்பினும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத்துறையின் மூத்த வல்லுநர், இயக்குநர் இனிய அணுகுமுறையைக் கொண்டிருந்தாலும் கூட குறுகிய கால ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொள்வது இல்லை. ஆனால் இதன் மூலம் குறைந்த பட்சம் 20 சதவீத உற்பத்தித் திறனை அடைய முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

குமார் தனக்குத்தானே மேலாண்மை செயல்கள் நடைபெறும் விதத்தையும் நிறுவனம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் அறிந்துள்ளார்.

கேள்விகள் :

இந்த பிரச்சனைகளைக் களைய குமார் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்?